DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| CC / STC. No | .. .. **CC. 44/2025** | | |
| Deposition of Witness for | PW 1<br>Prosecution<br>Court | | |
| Name | : **திருமதி. வாசுகி** | Taluk | : பெத்தநாயக்கன்பாளையம் |
| Father/Husband Name | : க.பெ.திரு.ராமு | Calling | : கூலி வேலை |
| Village | : எடப்பட்டி | Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18.11.2025.

***எதிரி ஆஜர் இல்லை, மனு BNSS 355 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.***

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

**துவக்க நேரம்** 01.07

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த ராமு எனது கணவர் ஆவார்.

2) தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 2 1/2 வருடத்திற்கு முன்பு ஒருநாள் மாலை 03.00 மணியளவில் எனது கணவர் கொத்து வேலைக்கு செல்ல சொல்லிவிட்டு, சென்றார். அதன்பிறகு, மாலை 04.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது, சண்முகம் என்பவர் எனக்கு போன் செய்து, நெய்யமலை ரோட்டில் உள்ள பிள்ளையார் கோவில் அருகில் நான்குசக்கரவாகனமாக டெம்போ எனது கணவரின் வாகனத்தின் மீது மோதி, விபத்து ஏற்பட்டு, காலில் அடிப்பட்டுவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்.

3) அதன்பிறகு, நான் , எனது உறவினர்களுடன் சென்று பார்த்தோம். நாங்கள்

சென்று பார்த்தபோது, எனது கணவருக்கு தோள்பட்டையிலும், தொடையிலிருந்து ஒரு கால் முழுவதும் பலத்த அடிப்பட்டு,கசங்கி மயக்க நிலையில் இருந்தார். அருகில் இருந்தவர்கள் தண்ணீர் பருக கொடுத்துக்கொண்டிருந்தார்கள். நானும் கொடுத்தேன். ஆனால் அவர் முழிக்க வில்லை. அருகில் இருந்தவர்கள் போன் செய்ததால், 108 ஆம்புலன்ஸ் வந்துவிட்டது.

4) அதன்பிறகு, 108 ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது, வழியிலேயே இறந்துவிட்டார் என்று மருத்துவர்கள் கூறினார்கள். எனது கணவரின் மீது மோதிய வாகனத்தின் பதிவெண் தற்பொழுது நினைவில்லை. விபத்தை ஏற்படுத்திய நபரை நான் பார்க்கவில்லை. எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டதால் நான் அழுதுக்கொண்டிருந்தேன். அருகில் இருந்தவர்கள்தான் விபத்தை ஏற்படுத்திய வாகனம் எடப்பட்டியை சேர்ந்த சுரேஷ் என்பவருக்கு சொந்தமான வாகனம் என்று சொன்னார்கள்.மேலும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டதாக கேட்டு தெரிந்துகொண்டேன்.

5) எனது கணவரின் மீது மோதி, விபத்தை ஏற்படுத்திய நபரின் மீது நடவடிக்கை எடுக்ககோரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது. நான் கொடுத்த புகாரில் கைரேகைதான் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதன்பிறகு,சேலம் மருத்துவமனையில் எனது கணவரின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்து, என்னிடம் ஒப்படைத்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் புகார் கொடுத்ததாக சொல்லும்பட்சத்தில், சம்பவம் நடந்தன்றே புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லும் இடம் பிள்ளையார் கோவில் பஸ் ஸ்டாப் என்றாலும், அந்தயிடத்தில் ஒரு வளைவு உள்ளது என்றாலும் சரிதான்.

2) எனது கணவர் எடப்பட்டியிலிருந்து பேளுருக்கு கிழ மேல் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்குபுறம் சென்றார் என்றால் சரிதான். நான் விபத்து குறித்து

கேள்விப்பட்டு சென்று பார்த்தபோது, விபத்தில் அடிப்பட்ட எனது கணவர் ரோட்டிற்கு வடக்கு புறத்தில் இருந்தார் என்றால் சரிதான்.

3) விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் டெம்போ மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுத்ததாக சொல்லும்பட்சத்தில், எழுதியிருந்த பேப்பரில் நான் கைரேகை மட்டும்தான் செய்தேன் என்றால் சரிதான், ஆனால், போலிசார்கள் அதனை படித்துக்காண்பித்தார்கள்.

4) எனது கணவர்தான் வளைவில் வண்டி வருவதை கவனிக்காமல், வேகமாக சென்று, இந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றாலும், எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**முடிவு நேரம்** 01.22.

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA

Digitally signed by ANIS FATHIMA
Date: 2025.11.18 15:24:24 +0530

Judicial Magistrate No.1,
Attur.